ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்யதர்மம்.

पापान्निवारयति योजयते हिताय गुह्यं
निगूहति गुणान् प्रकटीकरोति ।
आपद्गतं च न जहाति ददाति काले
सन्मित्रलक्षणमिदं प्रवदन्ति सन्तः ॥

எவனொருவன், பாபகார்யங்களிலிருந்தும் விலக்குகிறவனும் சுகத்தையுண்டுபண்ணுகிற மார்க்கங்களில் செல்லும்படி செய்கிறவனும், வெளியிடாமல் ரகஸ்யமாய் வைத்துக் கொள்ள வேண்டிய விஷயங்களை அவ்விதமே வைத்துக் கொள்ளுகின்றவனும், சிறந்த குணங்களை வெளியில் பிரகாசிக்கும்படி செய்கின்றவனும் தன் நண்பனுக்கு ஆபத்து நேர்ந்த காலத்தில் விடாமல் பாதுகாப்பவனும், எந்த ஸமயத்தில் உபகரித்தால் மிகவும் உபகாரமாயிருக்குமோ அக்காலத்தில் உபகரிப்பவனுமாக இருக்கிறானோ; அவனையே சிறந்த மித்திரனாகச் சான்றோர்கள் சாற்றுகின்றார்கள்.

உலகில் யாராகிலுமொருவர் அதிக ஐச்வர்யத்துடனிருந்தால், அவனிடமிருக்கும் பொருள் முதலியவைகளைப் பல வழிகளாலும் அபகரித்துத் தனக்கு உபயோகப் படுத்திக்கொள்ள வேண்டித் தமக்குப்பரமமித்திரனாகவும் தங்களுக்கும் அவனிடம் அதிக அபிமானமிருக்கிறதென்றும் எங்களுக்கு சரீரம் மாத்திரம் பேதமேயன்றி வேறு பேதமில்லையென்றும் அபிநயித்து அவன் பொருளைக் கூடியசிக்கிரம் கெட்ட மார்க்கத்தில் செலவிடும்படி செய்து பொருள் போனவுடன் அவனைத் திரும்பி கூடப் பாராமல் வேறிடம் செல்லும் அடுத்துக் கெடுக்கும் போலி மித்திரர்கள் அநேகம் பேர்கள் உண்டு. உண்மையில் இவர்கள் சத்துருக்களேயன்றி வேறல்ல. இவ்விதம் சில துஷ்டர்களை நம்பிப் பலர் மோசம் போயிருக்கிறார்கள், உண்மையில் மித்திரனாயிருப்பின் இங்கு குறிப்பிட்ட இலக்கணம் அவனிடமிருக்க வேண்டும். அவ்விதமில்லாவிடில் அவனை மித்திரனாக நாம் கருதக்கூடாதென்றும் கருதினால் நமக்கு ஆபத்து நேருமென்றும் அறிவிக்கிறார்.

உபபத்திராதிபர்.

ஸ்ரீ தப்ரபக்த சரிதம்.

மஹாசிவராத்திரி புண்யகாலத்தில்
அத்வைதஸபா பண்டிதரான பிர்மஸ்ரீ
யக்ஞஸ்வாமி சாஸ்திரிகளவர்களால் செய்யப்பட்ட
உபன்யாசத்தின் சுருக்கம்.

(௧௯௫-வது பக்கத் தொடர்ச்சி.)

அவர் செய்யும் நிர்பந்தத்தை மறுப்பது நியாயமில்லை என்று தாமும் கூட உட்கார்ந்து ஸ்ரீ பரமேசுவரனை ஸ்மரித்துக் கொண்டு ஒரு சிலாகபளத்தைக் கையில் எடுத்துப் புசிக்கப் போகும் ஸமயத்தில் "தப்ரபக்த, நில், நில் ஆகா! இப்பொழுது தான் எனக்கு ஸ்மரணம் ஏற்பட்டது, பசியின்உபத்திரவத்தினால் முந்தியே சொல்ல மறந்து விட்டேன். ஐந்தாறு வயது கொண்ட ஸ்ரீபதி என்று பெயர் பூண்ட ஒரு புத்திரன் உனக்கு இருக்கிறானல்லவா? சிறந்த சாப்பாடாக நடக்கும் இந்த ஸமயத்கில் அவன் ஏன் இல்லை? புத்திரனில்லாத கிருகத்தில் நான் ஒரு நாளும் போஜனம் செய்ததில்லை. புத்திரனில்லாத கிருகத்தில் போஜனம் செய்யக்கூடாதென்று சகல சாஸ்திரங்களும் முறையிடுகின்றன.

सरस्सरोजेन विनाकृतं यथा विना शशाङ्केन नभःस्थलं यथा ।
अदृष्टसूर्यं दिवसं यथा तथा निकेतनं भाति न पुत्रवर्जितत् ॥

பங்கயமில்லாத குளமும், ராத்திரியில் திங்களில்லாத ஆகாயமும், சூரியனில்லாத பகலும் எப்படிச் சோபியாவோ அப்படியே புத்திரனில்லாத கிருகமும் பிரகாசிக்காது. பின்னும்முகத்திற்குக்

கன் அலங்காரம், த்விஜர்களுக்கு வேதவித்யை அலங்காரம், குலஸ்
திரீகளுக்குப் பாதிவிருத்தியம் அலங்காரம், கிருகத்திற்குப் புத்
திரன் பூஷணம் எவன் தனது போஜன ஸமயத்தில் பாத்திரத்தி
லிருக்கும் அன்னத்தைப் புத்திரனுக்குப் போடாமல் தான் முந்தி
புசிக்கிருனே அந்தப் போஜனம் நாய் மாம்ஸத்தைப் புசிப்பது
போலாகும்.

अहो दयाविहीनोऽसि कुलतन्तुकुमारकम् ।
उद्युक्तोऽसि विहायैत्र भोक्तुं भक्त कथन्तराम् ॥

அடே தப்ரபக்த, என்ன ஆச்சர்யம்! கொஞ்சம் கூட உனக்குத்
தயை இல்லையே. குலத்தைப் பாதுகாக்கும் சக்தி பொருந்திய
ஒரு குழந்தையை விட்டு விட்டு எப்படி நீ புசிப்பதற்கு யத்த
னிக்கிருய் ?

कथं वा ते दया नास्ति श्रीश्वेतवननायिके ।
भर्तुर्भोजनकालज्ञा पुत्रं नाहूयसे यतः ॥

ஹே, சுவேதவந நாயிகே, உனது பர்த்தா தான் புருஷன். ஒரு
மாதிரியாக இருக்கிருன். தாயாராகிய நீயும் கொஞ்சம் கூடத்
தயவில்லாமல் எப்படியிருக்கிருய்? பதியின் போஜன காலமென்று
அறிந்திருந்தும் உனது குழந்தையைப் போஜனத்திற்காக
அழைக்காமலிருக்கிருயே" என்று அவளிடம் சொல்லிவிட்டுத்
தப்ரபக்தரைப் பார்த்து "ஹே, தப்ரபக்த, வெளியில் போய்ப்
பார்த்துப் பையனைச் சீக்கிரம் அழைத்து வா" என்று அவரிடம்
ஆக்ஞை செய்தார். அவர் பார்யையையும் "நீயும் போய்மாட்டுக்
கொட்டிலிலோ அல்லது அங்கணத்திலோ விளையாடுவான்; பார்த்
துச் சீக்கிரமாக உனது புத்திரனை அழைத்து வா என்று அனுப்
பினர். அந்தத் தம்பதிகள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு
"பகவானுடைய ஆக்ஞை எப்படியிருந்தாலும் நாம் அனுஷ்
டித்தே தீரவேண்டும்" என்று குழந்தையைத் தேட வேண்டி
வெளியில் வந்தார்கள். வெளியில் வந்து வித்தியாசாலையைப்
பார்த்துக் கொண்டு " ஹே, ஸ்ரீ பதே சீக்கிரம் வா; மஹேசுவா
பக்தர் வரும்படி ஆக்ஞை செய்கிருர்" என்று மூன்று தரம் கூவி
னர்கள். உடனே சிவபெருமானுடைய உத்தரவால் ஸ்ரீபதி
வீதியில் வந்துவிட்டான். அங்கிருந்தும்

सिद्धार्थजीरकमरीचिनवाढ्यगन्धान्यङ्गानि भूषणकलापविभूषितानि ।
बिभ्रत् पिनाकधनुषैव कृताभयश्रीस्स श्रीपतिः पुरतएव बभूव पित्रोः ॥

வெள்ளைக்கடுகு, ஜீரகம் மிளகு முதலான வஸ்துக்களுடைய புதிதான வாஸனையையுடையனவும் பல ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு விளங்குகின்ற அங்கங்களைத் தரிப்பவனும், பினாகபாணியான கங்காதரரால் அபயப்ரதானம் செய்யப்பட்டவனுமான அந்த ஸ்ரீபதி தனது மாதா பிதா இவர்கள் முன்னிலையில் வந்தான். தனது தாயை நோக்கி "ஹே, அன்னையே, உனது மடியில் நித்திரை செய்து கொண்டிருந்த நான் வெளியில் எப்பொழுது போனேன்" என்று வினவ, அந்தப் பாலகனை மாதா பிதா இருவர்களும் ஆலிங்கனம் செய்துகொண்டார்கள். உடனே வானத்தில் தேவதைகளால் துந்துபி முதலான வாத்தியங்கள் வாசிக்கப் பட்டன. ஆகாயத்திலிருந்தும் விண்ணவர்கள் புஷ்பமாரி பொழிந்தனர். ஹிமவானுடைய புத்திரியான பார்வதீதேவி புளகாங்கித சரீரத்தையுடையவளாய் அந்தத் தம்பதிகளுடைய பக்தியைப் புகழ்ந்தாள். மஹா பைரவரூபத்துடன் வந்திருந்த ஸ்ரீ சம்புவும் தமது இருப்பிடம் சென்று விட்டார். அவருக்குப் போட்ட இலையும் அதில் பரிவேஷணம் செய்யப்பட்ட மாம்ஸஹவிஸ்ஸும் அவ்விதமே மறையாமலிருந்தன. புத்திராலிங்கனத்தினால் அதிக சந்தோஷத்தையடைந்த அந்தத் தம்பதிகளிருவரும் உள்ளே இருக்கும் ஸ்ரீ மகாதேவருக்குப் போஜனம் செய்து வைக்க வேண்டிச் சீக்கிரமாக வந்தார்கள். உள்ளே வந்து போஜன சாலையைப் பார்க்குங்கால் சிவபக்தர் காணப்படவில்லை. போஜனம் செய்ய வேண்டி ஸமர்ப்பணம் செய்த வஸ்துக்கள் பூராவும் அற்பம் கூடக் குறைவடையாமலிருக்கின்றன. இவைகளையறிந்த அந்தத் தம்பதிகள் ஆச்சரியத்தோடு கூடிய ஹிருதயத்துடன் நாலாபக்கங்களிலும் அந்தச் சிவபக்தரையே தேடினார்கள். சிவபக்தரைக் காணாததினால் அவர்களுக்கு ஏற்பட்ட துக்கம் அதிகமாயிருந்ததேயன்றி, மரித்த புத்திரன் கிடைத்தான் என்கிற சந்தோஷம் அதிகமில்லை. உடனே அவர்கள் பகவானை யுத்தேசித்து "ஹே, சம்போ, பக்தர்களான எங்களைத் தாங்கள் இவ்விதம் உபேக்ஷை செய்யலாமா?" என்று

கண்ணீரை வர்ஷித்துக் கொண்டு "முன்ஜன்மாவில் ஸ்ரீ பரமேசுவரனுடைய பூஜையில் எதாகிலும் நாம் விக்னம் செய்திருப்போம் அந்தப் பலத்தை இக்காலம் அநுபவிக்கிறோம்" என்று மிகவும் துக்கத்துடன் அலோசித்துக் கொண்டு ஸ்ரீ சந்திர சேகருடைய சரித்திரத்தையே சொல்லிக் கொண்டு அவருடைய வரவையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இந்த ஸமயத்தில்

अथाविरासीत् भगवान् दयानिधिः पुरस्तयोर्देवगणैरभिष्टुतः ।
सहैव गौर्या गजवक्त्रशक्तिभृन्निषेव्यमाणो वृषभोपरि स्थितः ॥

கருணாநிதியாயும் தேவகணங்களால் போற்றப் பட்டவராயும் விநாயகர் ஷண்முகர் இவர்களால் ஸேவிக்கப்பட்டவராயும் தமது வாஹனமான விருஷபத்தில் ஸ்ரீ பார்வதீ தேவியுடன் வீற்றிருக்கும் பகவானான உமாபதி அந்தத் தம்பதிகளுக்கு முன்னே தோன்றினார்.

जयेति रक्षेति विलोकयेति देव प्रसीदेति पुराणवाग्भिः ।
अभिष्टुतश्चन्द्रकलावतंसः श्रीदभ्रभक्तान्तिकमाससाद ॥

"ஹே தேவ, நித்யப்ரகாச ஸ்வரூபியாய் விளங்கும் ஹே பார்வதீநாத, நீர் எப்பொழுதும் ஜயம் பெறவேண்டும் உமது கருணையுடன் கூறிய நேத்திரத்தால் பக்தர்களைப் பார்த்து ரக்ஷிக்கவேண்டும்" என்று புராண வசனங்களால் போற்றப்பட்டவரான ஸ்ரீசந்திர கலையைச் சிரஸ்ஸில் அலங்காரமாய் அணிந்திருக்கும் பரமேசுவரன் தப்ரபக்தருக்கு அருகில் எதிர்முகமாக வந்தார்.

संपूजितस्तेन च भक्तिपूर्वं भार्यासमेतस्य च तस्य धात्र्याः ।
वितीर्य मुक्तिं विबुधैर्दुरापामन्तर्दधे शम्भुरचिन्त्यभूमा ॥

மிகுந்த துக்கத்துடன் வெகு காலமாய் எதிர்பார்த்திருந்த பிரபு விருஷபாரூடராய்த் தமது தேவியுடன் எதிரில் தோன்றியவுடன் அதிக பக்தி சிரத்தையுடன் கூடிய அந்தத் தப்ரபக்தரால் விதி விழுவாமல் நன்கு பூஜிக்கப் பட்டார். அவரது பூஜையை அங்கீகரித்த கைலாச நாதரும் பத்னியுடன் கூடிய தப்ரபக்தருக்கும், அவரது புத்திரனை வளர்த்த உபமாதாவுக்கும், தேவர்களாலும்

பெற முடியாத முக்தி என்னும் சிறந்த பதவியை யளித்து அள விடவியலாத மஹிமை வாய்ந்த ஸ்ரீசம்பு உடனே மறைந்து விட்டார்.

இதனுல் மானிட ஜன்மாவை யடைந்தவர்கள் பகவத் பக்தி செய்ய வேண்டியது முக்கியமென்றும், அதுவும் உலகிலுள்ளோர் தம்மைப் 'பக்தர்' என்று புகழ வேண்டி வேடம் போடாமல் உண்மையாக இருக்க வேண்டுமென்றும் அவ்வித பக்திமான்களைப் பகவான் ஒரு ஸமயமும் கைவிடாமல் அவர்களுக்கு இருக்கும் ஸம்ஸார துக்கத்தை முற்றிலும் போக்கி மோக்ஷமென்னும் சிறந்த பதவியையளித்துச் சுகித்திருக்கும் படி செய்வார் என்றும் அறிவிக்கப்படுகின்றது. சுபம்!

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

வித்யா.

பண்டிதச்ரேஷ்டர்களே! இவ்வுலகில் மானிட ஜன்மம் மிகவும் அரிது. இத்தகைய கிடைத்தற்கரிய மானிடப்பிறவியை அடைந்த நமக்கு, எக்காலத்திலும் அழிவுறாத நித்யாந்த ஸுகத்தைக் கொடுக்ககூடிய மோக்ஷஸாம்ராஜ்யத்திற்கு அவச்யமானகல்வி, மிகவும் முக்கியமானது. அக்கல்வியைப் பற்றி என் சிறிய புத்திக்கெட்டியவாறு வரையத் துணிகின்றனன்.

கல்வி மானிடற்கு உயர்ந்த அழிவுறாத ஆபரணமாகத் துலங்குகின்றது. இக்கல்வியே யாவற்கும், குல தனமாகும். பொருள் உள்ளவர் தனிசர் அல்லர்; கல்வியுள்ளவரே தனிகராவர். ஒரு தீபத்திலின்றும் பல தீபங்கள் ஏற்றப்பட்டு விருத்தியடைவது போல், கல்வியும் பிறருக்குப் புகட்டப் புகட்ட விருத்தியடைகிறதேயன்றி நசிப்பதில்லை. தான்கற்ற கல்வியைப் பிறருக்கு அனுக்கிரகித்தே பல பெரியோர்களும் பண்டிதர்களும் மிகுந்த கீர்த்தியை அடைந்திருக்கிறார்கள். வித்வானுடைய புத்தியானது பிறருக்கு உபதேசிப்பதினாலேயே தெளிவை அடைகிறது.

இவ்வுலகில் எல்லோராலும் கொண்டாடப்படுபவன் தனிகனா? அல்லது வித்வானா? என்று ஆலோசிக்குமளவில் எல்லோராலும் கொண்டாடப்படுபவர் வித்வானென்றே உரைக்கலாம். வித்தையின் ஸம்பந்தமற்ற கேவலம் தனத்தைப்பற்றிச் சற்று விசாரிப்போம்.

இத்தனமானது வித்யையின் ஸம்பந்தமில்லாமல் தான் மாத்திரம் ஒருவனுக்குக் கௌரவத்தைக்கொடுக்கச் சக்தியுடையதாகாது. மேலும் ஓரிடத்தே இத்தனமானது நிலைநிற்காது. ஆகவே செல்வம் மின்னல்போலும் நீர்க்குமிழிபோலும் அழிவுறுவதாகும். மனிதருக்கு ஸம்பவிக்கக்கூடிய ஸகல ஆபத்திற்கும் மூலகாரணமாக இத்தனமேயாகிறது. மனிதருக்கு நான்காவது புருஷார்த்தத்திற்கு (மோக்ஷத்திற்கு) நேர் விரோதமாகிய விஷயாதிகளில் பிரவிருத்தியை உண்டுபண்ணுகிறதும் இத்தனமே. தன்னிடம் ஆசைவைத்த மனிதரைச் செய்யக்கூடாததான கெட்டகாரியங்களிலும் ப்ரவிருத்திக்கச் செய்து விடுகிறது. இக்கொடிய தனமானது மனிதருக்கு மரணத்தையும் உண்டு பண்ணிவிடுகிறது.

மேலும் உலகில் செல்வவானென்றும் ப்ரசித்திப்பெற்றிருக்கும் ஒருவனை, ஒருராத்திரியிலேயே திருடர்கள்வந்து வளைத்துக்கொண்டு விடுகிறார்கள். அத்தனிகன் பணம் வைத்திருக்கும் இடத்தைச்சொல்லாவிடில், அக்கொடிய கள்வர்கள் நகத்தில் ஊசி எற்றுவது, வாயில் துணி அடைப்பது முதலான பொறுக்க முடியாத ஆயாசத்திற்குள்ளாக்குகிறார்கள்.

இவ்வித இக்கொடிய தனமானது ஒருவிதத்திலாவது நமக்கு அனுகூலத்தை உண்டு பண்ணுமேயாகில் அதை நாம் ஆதரிக்கலாம். அதனிடத்திலோ அல்ப ஆனுகூல்யத்தையும் நாம் காணோம்.

ஆகவே பல ஆபத்துக்குக் காரணமாயிருக்கிறதும் அழிவுடையதுமான செல்வத்தைக்காட்டிலும், ஸகல சுகத்திற்கும் காரணமாகவும், அழிவில்லாததாயும், இருக்கிற வித்யையையே ஆதரிக்கவேண்டும். அத்தகைய வித்யையைப் பற்றிச் சற்றுக்கூறுவோம்.

தனிகன் தன்வீட்டில் மட்டுமே ஆதரிக்கப்படுவான். வித்வானோ என்றால் எவ்விடத்திலும் பூஜிக்கப்படுவான். இதையே ஸாஹித்யவித்யா நிபுணர் ஒருவர் எழுதியுள்ளார்.

स्वदेशे पूज्यते राजा विद्वान्सर्वत्र पूज्यते । इति ।

உயர்ந்த வித்யையானது நம்மிடம் இருக்குமாகில் பெரிய அரசர்களுடைய தர்சனத்தை அடைந்து, அவர்களாலும் நன்றாக உபசரிக்கப்படலாம். எவருக்கு வித்யை இருக்கிறதோ அவருக்கு வினயமும் அவச்யம்.

அப்படிப்பட்ட வினயமில்லாமல் ஓர் வித்வான் தான் அப்யஸித்த வித்யையினால் மிகவும் கர்வம் கொண்டு, யானை மதத்தினால் கண்ணை மூடித்திறப்பதுபோல், வித்யாமதத்தினால் கண்ணைமூடி மூடித்திறந்து கொண்டும், பிறர் சொல்லும் வார்த்தையை அங்கீகரிக்காமலும், பிறரைத் திருணமாக நினைத்துமிருப்பரேயானால், அவர் அப்யஸித்த வித்யையானது ஒருபோதும் சோபிக்காது. வித்யாப்யாஸத்திற்கு பலம் வினயமன்றோ. வினயமில்லாமல் கேவலம் வித்தையையுடையவனை மகான்களான கவிகளும் ஆலங்காரிகர்களும் நிந்திக்கின்றனர். ஆகையினாலே தான்

विद्या हृद्याऽपि सावद्या विना विनयसंपदम् ।

என்று சொல்லப்பட்டிருக்கிறது. (வித்யையானது மிகவும் மனோஹரமாக இருந்தபோதிலும் வினயமில்லாவிடில் அது தோஷத்தோடுகூடியதே என்பது கருத்து) சில பண்டிதர்கள் நானே பண்டிதன் என்ற கெட்ட எண்ணம்கொண்டு தன்பிதா சேர்த்துவைத்த பணம்போல் தான் அப்யசித்த வித்யையைப் பிறருக்கு உபதேசிப்பதற்கு இஷ்டமில்லாதவர்களாயிருக்கிறார்கள். வித்யையை அபிவிருத்தி பண்ணுவதிலேயே நோக்கமுடைய மகான்களான சில பண்டிதர்கள் அவர்கள் எவ்வளவு தன் குருவினிடத்திலிருந்து அப்யஸித்தார்களோ அவ்வெல்லாவற்றையும் பிறருக்கு போதிக்கின்றார்கள். சிலபண்டிதர்கள் ப்ராகிருத ஜனங்கள்போல தான் அப்யஸித்த சாஸ்திரங்களெல்லாவற்றையும் மறந்து விஷயாதி

அல்பஸுகங்களில் ஈடுபட்டு விடுகிறார்கள். வேறு சிலர் परोपदेशे-पाण्डित्यम् என்னும் வாக்யத்தை உண்மையாக்கிப் பிறருக்கு ஒழுங்காக எல்லாவற்றையும் உபதேசித்துவிட்டு தாம் செய்யவேண்டிய அவச்ய கர்மாக்களையும் விட்டு தம் வேஷத்தினால் மாத்திரம் பிரகாசிக்கிறவர்களாயிருக்கிறார்கள்.

ஆகவே தாம் கற்ற சாஸ்திரங்களின்படி அனுஷ்டித்தும் அதன் தத்வார்த்தத்தை உணர்ந்தும், அற்பமான விஷயாதிகளில் ஈடுபடாமலும் ஸம்பூர்ணமாகச் சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்து கொண்டும் இருப்பவரே உத்தமமான பண்டிதராவர்.

உலகில் வித்யையினால் ஸாதிக்கமுடியாத காரியம் ஒன்றுமில்லை என்றே சொல்லலாம். வித்யையானது ஸகல ஸுகத்திற்கும் ஆதிகாரணமன்றோ!

विद्या ददाति विनयं विनयाद्याति पात्रताम् ।
पात्रत्वाद्धनमाप्नोति धनाद्धर्मं ततस्सुखम् ॥

நன்றாக அப்யஸித்த வித்தையானது வினயத்தை உண்டுபண்ணுகிறது, வினயத்தினின்றும் ஸத்பாத்திரமாயிருப்பது, பாத்திரமாய் இருப்பதினால் தனலாபம், ஸம்பூர்ணமான தனத்தினால் தர்மானுஷ்டானம், தர்மத்திலிருந்தும் ஸுகம் என்று எல்லாம் வித்யையினாலேயே உண்டாகிறது. இப்படிப்பட்ட இவ்வித்யையானது திருடனாலும் அபஹரிக்க முடியாதது. எப்போதும் நமக்கு ஸுகத்தையே உண்டுபண்ணுகிறது. பிறருக்கு உபதேசிப்பதிலிருந்து அதிகமாக விருத்தியடைகிறது. எக்காலத்திலும் அழிவை அடைகிறதில்லை.

ஆகையால் நமக்கு முக்யமான தனம் வித்யையே. திவ்ய போகங்களைக் கொடுக்கக்கூடியதும் வித்யையே. மிகுந்த யசஸை உண்டு பண்ணுவதும் வித்யையே. குருவுக்கும் பரமகுருவாக இருப்பதும் வித்யையே. பழக்கமில்லாததான புதிய தேசங்களில் பந்துவைப் போலுதவுவதும் வித்யையே. நம்மால் ஒவ்

வொருநாளும் முக்கியமாய் ஸ்தோத்திரம் செய்யப்படுவதும் வித்யையே. சக்ரவர்த்திகளிடமிருந்து நாம் மர்யாதைகளையும் ஸந்மானங்களையும் பெறுவதற்குக் காரணமாயிருப்பதும் வித்யையே. இப்படிப்பட்ட வித்யையை ஒன்றே புருஷனுக்கு அலங்காரமாக இருக்கிறதே தவிர ஆபரணங்கள் அல்ல.

இதை பர்த்ருஹரி நீதிசதகத்தில்

केयूराणि न भूषयन्ति पुरुषं हारा न चन्द्रोज्वला
न स्नानं न विलेपनं न कुसुमं नालंकृता मूर्धजाः ।
वाण्येका समलंकरोति पुरुषं या संस्कृता धार्यते
क्षीयन्तेऽखिलभूषणानि सततं वाग्भूषणं भूषणम् ॥

புருஷனுக்குக் கேயூரங்கள், உயர்ந்த ஹாரங்கள், உத்தமமான ஸ்நாநம், சந்தனப் பூச்சுக்கள், நல்ல புஷ்பங்கள், வாரிமுடியப்பட்ட கூந்தல், இவைகளெல்லாம் அலங்காரத்தை உண்டுபண்ணுகின்றனவாகாது. வித்யை ஒன்றே அலங்காரத்தை உண்டு பண்ணுகிறது. மற்றும் இதர ஆபரணங்கள் நசித்துவிடுகின்றன. வாக்பூஷணம் ஒன்றே அழிவில்லாதது. எது நமது அக்ஞானமாகிற இருளை விலக்கிப்பவமெனும்கொடியையும் அடியோடறுத்து மோக்ஷமென்கிற சிறந்த புருஷார்த்தத்தைக் கொடுக்கும் சக்தியுற்றதோ அது தான்வித்யையென்று சொல்லப்படுகின்றது. அவ்வித்யையே நாம் கற்கமுயற்சிக்கவேண்டும்.

மேலும் ராஜ்யம்கூட வித்யைக்கு அதீனமன்றோ, ராஜ்யமானது அரசனுக்கு மகத்தான கஷ்டத்தை உண்டுபண்ணுகிறது. ஸுகத்தையும் தருகிறது. இதையே கவிகேஸரியான காளிதாசர் எழுதியுள்ளார்

राज्यं स्वहस्तधृतदण्डमिवातपत्रम् ।

"ராஜ்யத்தைத் தாங்குவது, தன்கையில் பிடிக்கப்பட்ட பெரிய தாழங்குடைக்கொப்பானது" என்று. ஆகையால் அப்பேர்ப்பட்ட ராஜ்யத்தைப் பரிபாலிக்கும் அரசன் வித்வானாக இருக்கவேண்

டும். அப்படிப்பட்ட அரசனும், எல்லாவற்றையும் பிறரோடு ஆலோசிக்காமல் தானாகச் செய்வதற்கு வல்லவனாக ஆகான். ஆகையால் ராஜாவுக்கு முக்கியமான காரியங்களை ஆலோசிப்பதற்காக மந்திரிகள் அவசியம். ப்ருஹஸ்பதிக்கொப்பான மந்திரிகளல்லவா அரசர்களை நன்றாக ரக்ஷிக்கிறார்கள். மந்திரிகள் சொல்லும் விஷயமானது அரசனுக்குச் சரியாகத் தோன்றினாலும் அல்லது அதற்கு விபரீதமாகப் பட்டாலும், குருவின் வாக்யத்தைச் சிஷ்யன்போல, அவசியம் செய்தே தீரவேண்டியதாகும். ராஜ்யமானது அரசனுடைய கையில் இருப்பதில்லை. மிகவும் ஸுகத்தை அனுபவிப்பதினால் அரசனுடைய புத்தியானது ஸூக்ஷ்மமாக இருப்பதில்லை. எந்த இடத்தில் ஸ்ரீயானது ஸம்பூர்ணமாயிருக்கிறதோ அவ்விடத்தில் வித்யை ஸம்பூர்ணமாயிரா. இதையே

यत्र विद्या न तत्र श्रीर्यत्र श्रीर्न सरस्वती ।

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் ராஜ்யமானது மந்திரிகளுடைய கையில் இருக்கிறது. அப்படிப்பட்ட சிறந்த வித்தையுள்ள மந்திரிகள் இல்லாவிடில் அரசர்களுக்குப் பெரிய ஆபத்துக்கள் ஏற்பட்டுவிடும். இதற்கு உதாஹரணமாக ஒருசிறிய கதை கேட்டிருக்கலாம்.

ஒரு நகரத்தில் ஒரு அரசன் இருந்தான். அவன் ஸகலசாஸ்திரங்களையுமறிந்தவன். ஒருஸமயம் சத்துரு ராஜாக்கள்போருக்கு வருவதைச் சாரர்மூலமாய்க் கேட்டவுடன், தன் வேலைக்காரர்களிடம்மதிளைச் சுற்றிலும் துளஸிச்செடியை வைத்துப் பயிராக்கும்படியாக உத்திரவிட்டான். பகவானுடைய அர்ச்சனைக்குபயோகமான இத்துளஸியை சத்துருக்கள் காலால்தொடுவதற்குத் துணியார்கள் என்று எண்ணிக் கொண்டான்போலும். ப்ருத்யர்களும் அவ்விதமே செய்து முடித்தார்கள்; சத்துருக்களோ என்றால் தடையின்றி உட்புகுந்து அரசனைப் பிடித்துக்கொண்டார்கள். கஷ்டம்! இப்பொழுது அவ்வரசனின் புத்திபலத்தை என்னவென்று சொல்

வோம், புத்திமானுன மந்திரி ஒருவர் அவ்வமயம் இருப்பாரேயா கில் அவ்வரசன் இத்தசையை அடையான்.

ஆகையால் எல்லாம் வித்யாதீனமல்லவா? வித்யையினுல் மிருத்யுவையும் வெல்லலாம், அதற்கு உதாஹரணமாக ஒரு கதை இங்கெழுதுவாம்

த்ராவிட பாஷையில் ஒப்பில்லாத கவியான கம்பர் என்பவரைத்தெரியாதோர் ஒருவருமில்லை. அக்கம்பர் ஒரு ஸமயம் அரசன் ஒருவனை அடைந்தார். கம்பருடைய கவிதையினுல் பரவசனுன அவ்வரசன், தன் ஆஸ்தானபண்டிதர்களைக்காட்டிலும் கம்பரிடமே மிகுந்த அன்பு வைத்தான். ஆஸ்தான பண்டிதர்களுக்குத் தனம் வருவது குறைந்தது. அப்போது எல்லாப் பண்டிதர்களும் ஒன்றுகிக் கம்பரிடத்தில் அரசனுக்கு ஏற்பட்டிருக்கும் ப்ரீதியைப் போக்கடிப்பதற்கு மார்க்கம் தேட ஆரம்பித்தார்கள். இப்படிச் சில காலத்திற்கெல்லாம் ஒரு நாள் அரசன் கம்பரோடும் இதர பண்டிதர்களோடும் ஸம்பாஷித்துக்கொண்டு ஸபையில் வீற்றிருந்தான். அப்போது நாபிதன் ஒருவன் தனக்குரிய வேஷத்துடன் ஸபையில் பிரவேசித்துக் கம்பரைப் பார்த்து, ஆநந்தங் கோண்டு ஸமீபத்தில்சென்று, ஆலிங்கனமும் செய்து கொண்டு, அண்ணு எப்போதுவந்தீர் என்று கேட்டான்.

மிகவும் நிபுணரான கம்பர் "வெகு நாள் முன்பே வந்து விட்டேன்" என்று அவனுக்குப் பதில் அளித்தார். அப்போது அவ்விடமிருந்த ஆஸ்தான பண்டிதர்கள் இவ்விஷயத்தை அரசனுக்குத் தெரியப் படுத்தினுர்கள். இதைக் கேட்டவுடன் ராஜாவின் இருகண்களும் சிவந்தன. கைகள் படபடத்தன. இதோடு ப்ருத்யர்களை அழைத்து, "துராசாரத்தைக்கைக்கொண்ட இக்கம்பனைக் கொன்று விடுங்கள்" என்று ஆக்ஞாபித்தான்.

(தொடரும்)

M. R. விசுவநாத சாஸ்திரி,

சிதம்பரம்.

இந்நான்கு புரங்களுக்குட்பட்ட பிரதேசம் ஏகாம்பரநாதர் பூஜார்த்தமாய்வந்த பார்வதிதேவியார் வீற்றிருந்து இயற்றிய தவத்தினுல் பிரகாசமடைந்தமையால் தபோவனம் எனப்பெயர் பெற்றது.

இப்பொழுது சொல்லிய நான்கெல்லைக்குள் மாபலிபுரத்துக்கு 3 யோசனை மேற்கில் * திரிவேணி சங்கம நகரம்.

அதற்கு $1\frac{1}{4}$-யோசனை நிருருதியில் ¶ வியாக்கிரபுரவனம்.

அதற்கு $1\frac{1}{4}$-யோசனை வாயுவில் † க்ஷீராப்தி நகரம்.

அதற்கு $1\frac{1}{4}$-யோசனை ஈசான்யத்தில் ‡ நந்திகங்காபுரம்.

அதற்கு $1\frac{1}{4}$-யோசனை ஆக்னேயத்தில் முன்னர்க்கூறிய திரிவேணி சங்கமநகரம்.

விஷ்ணுமூர்த்தி தம்முடைய ஒரு பக்தனுக்குத் திருவேணி சங்கமத்தில் ஸ்நானஞ் செய்வதால் வரும்பலனை அடையும்படிச் செய்தனராதலால் திரிவேணிசங்கம நகரம் எனவும், வியாக்கிரபாதருக்கு நடராஜமூர்த்தி பூர்வத்தில் நிருத்த தரிசனத்தைக் காட்டினராதலால் வியாக்கிர புரவனம் எனவும், விஷ்ணுமூர்த்தி தம்முடைய ஒரு பக்தனுக்குத் திருப்பாற்கடலில் தாம் வீற்றிருக்குங்கோலத்தைக் காட்டினராதலால் க்ஷீராப்தி நகரம் எனவும் சிவபெருமானிடத்தில் அன்புள்ள ஒரு புலையன் தனது விளைநிலமெல்லாம் மழையின்றிப் பாழ்படக்கண்டு வருந்தி இருப்ப, அதற்குச் சிவபெருமானர் இரங்கி நந்தி தேவரின் வாயின் வழியாகக் கங்கையை வரச்செய்து பயிரை வளர்த்துப் பின் அவனை அத் தீர்த்தத்தில் மூழ்கச் செய்து மோக்ஷமடையச் செய்தனராதலால் நந்திகங்காபுரம் எனவும், அவை முறையே பெயர் பெற்றன.

---

* திரிவேணி சங்கம நகரமென்பது திருமுக் கூடலென வழங்குகின்றது. அது சிவாமென வழங்கும் சிவபுரத்திலுளது.

¶ வியாக்கிர புரவனமென்பது திருப்புலிவனம் எனவழங்குகின்றது. இது உத்தரமேருருக்குப் போகும் வழியிலுள்ளது.

† க்ஷீராப்தி நகரமென்பது திருப்பாற்கடலென வழங்குகின்றது.

‡ நந்திகங்கா புரமென்பது தக்கோலம் என வழங்குகின்றது.

இந்நான்கு நகரங்களுக்கு உட்பட்ட பிரதேசம் முன் பிரமன் செய்த அசுவமேதத்திற்குச் சாலையாக அமைந்து விளங்கினமையான் பிர்மசாலை எனப்பெயர் பெற்றது.

இப்பொழுது சொல்லிய விஷ்ணு க்ஷேத்திரத்தில் திரிவேணி சங்கமத்திற்கு ஒரு யோசனை மேற்கில் பாஞ்சாலிகை என்னும் துர்க்கை, அதற்கு 89 அம்சம் மேற்கில் கன்னிகேசர் என்னும் சிவபெருமானுர், அதற்கு 50 அம்சம் உத்தரத்தில் சூரியபுஷ்கரணி தீரத்தில் ஸ்வேதாக்கியர் என்னும் விஷ்ணு மூர்த்தி, அதற்கு 17 அம்சம் கிழக்கில் சந்திரபுஷ்கரணிதீரத்தில் க்ஷேத்திராங்கி என்னும் துர்க்கை, அதற்கு 51 அம்சத்தில் பாஞ்சாலிகை என்னும் துர்க்கை என்று எண்ணப்பட்டவர் வீற்றிருக்கின்றனர்.

க்ஷேத்திர நாமவிவரணம்.

காஞ்சி க்ஷேத்திரத்தைச் சத்தியவிரத க்ஷேத்திரம், பாஸ்கர க்ஷேத்திரம், தைஜஸ க்ஷேத்திரம், ஹரி ஹர க்ஷேத்திரம், சத்திய க்ஷேத்திரம், மஹாபுண்ணியப்பிரதக்ஷேத்திரம், கைலாசம், வைகுண்டம், ஸ்ரீபுரம் என வரும் ஒன்பது நாமங்களால் சான்ரேர்கள் புகழ்கின்றனர்.

வரலாறு.

எனறும் சிவ சாந்நித்தியத்தை உண்டு பண்ணுகிறதாயும், மஹா சக்திப்பிரபாவத்துக்கு முதலிடமாயும், அந்த மஹா சக்தியின் பிரதான சக்திகளினுடைய வைபவங்கள் விளங்கத் தக்கதாயும், சக்தி ஸ்வரூபமாகிய விஷ்ணு சக்திக்கு அதிஷ்டானமாயும், நாசமற்றதாயும், சான்ரேர்களால் சூழப்பட்டதாயும் இருப்பதால் சத்திய விரத க்ஷேத்திரம் எனவும்; சிரேஷ்டமான மலைகளாலும் ஆலயங்களாலும் சூழப்பட்டிருப்பதால் பாஸ்கர க்ஷேத்திரம் எனவும்; மஹாபிலம், மஹாவிருக்ஷம், புண்ணிய கோடி விமானம் என்னுமிவைகளை உடைத்தாயிருப்பதால் தைஜஸ க்ஷேத்திரம் எனவும்; சக்தி சிவாத்மகமாயிருப்பதால் ஹரி ஹர க்ஷேத்திரம் எனவும்; விஷ்ணு என்றும், சக்தி என்றும், சகுண பாவனையால் இரண்டு ரூபமாகப் பாவிக்கப்பட்டும், மஹாமாயை என்று நிர்க்குண பாவனையால் ஒரு ரூபமாகப் பாவிக்கப்பட்டும்

விளங்குகின்ற ஆத்ம சிற்சக்தியாகிய மஹாதேவியே ஆகாச ரூபமாயுள்ள பிலசக்தி ரூபமாயும், ஸ்திரீ ரூபமாயுமுள்ள காமாக்ஷி சக்தியாயும், புருஷ ரூபமாயுள்ள வரதராஜ சக்தி ரூபமாயும் இருப்பதால் சக்திக்ஷேத்திரம் எனவும்; அழிவில்லாததாயும் நிர்மலஸ்தானமாயும் புண்ணியாதிக்கிய முடையவர்கள் வாழ்வதற்கிடமாயும், இருப்பதால் கைலாசம் எனவும்; வைகுண்டம் எனவும்; ஸ்ரீ புரம் எனவும்; எல்லா விருக்ஷங்களும் தேவவிருக்ஷங்களாயும், கிணறு தடாகம் நதி முதலியவற்றிலுள்ள ஜலங்கள் கங்கா தீர்த்தமாயும், மானிடரெல்லாம் தேவர்களாயும், சிலைகளெல்லாம் சிவவிஷ்ணு ஸ்வரூபங்களாயும், நடப்போர்களுடைய பாத தூளிகளெல்லாம் பரிசுத்தத்தைச் செய்யத் தக்கவையாயும், வீசுகின்ற காற்றுப்பாவச்செயலை அடக்கும் அங்குசமாயும் இருப்பதன்றித் தேர்களும் சித்தர்களும் மோக்ஷாபேக்ஷையுள்ள சிரேஷ்டமான ரிஷிகளும் அந்த க்ஷேத்திரத்தில் தேஜோ ரூபமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருப்பதினாலும், இவ்வண்ணம் யாவும் எவரும் தெய்வரூபமாக இருக்கின்றபடியினாலும் புண்ணியப்பிரதக்ஷேத்திரம் எனவும் இது சொல்லப்படும்.

துண்டீரமண்டலத்துள் "சத்தியவிரத க்ஷேத்திரம்" முதலாகச் சொல்லப்பட்ட ஒன்பது நாமங்களை யுடைத்தாயிருக்கிற எல்லை எதுவோ அது காஞ்சி ஸ்தலம் என்று சொல்லப்படும்.

இந்த எல்லையின் நடுவில் ஸ்ரீ வித்தியாபரமேசுவரியினுடைய ஸ்தனகும்பத்தினின்றும் வெளிப்பட்டதாயும், நாசாகிதமாகிய ஞானத்தைக் கொடுக்கிற அமிர்தஸ்வரூபமாயும், தேகத்திற்கு வரும் நரைதிரை மூப்பாதி துக்கங்களைப் போக்கடிப்பதாயும், கிருதயுகத்தில் அமிர்தரூபமாயும், திரேதாயுகத்தில் பால் ரூபமாயும்துவாபரயுகத்தில் நெய் ரூபமாயும், கலியுகத்தில் ஜல ரூபமாயும் இவ்வண்ணம் யுகங்கள்தோறும் செல்லுகின்ற மகிமையுடைத்தாயும், ஸ்நானஞ் செய்த மாத்திரத்தில் ஸகலபாவங்களையும் போக்கி முக்தியைக்கொடுப்பதாயும் உள்ளபாலாறுஒன்றுசெல்லுகின்றது.

பாலாற்றின் வரலாறு

பூர்வத்தில் பராசக்தியினுடைய பாலுண்டருளிய மகிமையினுல் சர்வக்ஞராயும் பண்டிதோத்தமராயும் விளங்கும் சுப்பிரமணி

யர் ஒருகால் பிரமனை நோக்கி ஞானவித்யையான பிரணவார்த்தைக் கேட்ட காலத்தில் அவன் சொல்ல முடியாது சிறையில் இடப் பட்டனன். பின்னர் அப்பிரமன் தானும் அந்தப் பராசக்தியினு டைய க்ஷீரபானத்தை விரும்பி நந்திமலையில் தேவி தீர்த்தக்கரை யில் தவம் புரியச் சிவபெருமானுர் தோன்றினுர், அவர்பால் ஸ்ரீ வித்யை என்னும் மந்திரோபதேசம் பெற்று நூறுவருடம் அத் யுக்ரமான தவத்தோடு தேவித்தியானம் செய்து வரும்பொழுது மஹாமாயா ஸ்வரூபிணியாயும் ஸ்ரீ வித்தியா பரமேசுவரியாயும் லலிதாராஜராஜேசுவரியாயும் மஹாதிரிபுரஸுந்தரியாயும்ஸ்ரீ சக்கர புரஸாம்ராஜ்ஞியாயும், மஹா கைலாஸவாஸிநியாயும் விளங்கும் ஸ்ரீ மஹாதேவி மகிழ்ந்தவளாய்த் தனது ஸ்தனமாகிய கும்பத் தில் அவரவருக்கேற்ற ஞானங்கள் நிறைந்திருக்கும் அமிர்தநாய கமாயும் ஜரை மரணங்களைப்போக்கடிக்கிறதாயும் இருக்கிற பாலா கிய அமிர்தப் பிரவாகத்தைப் பிரமனுக்குப் பிரணவ ஞானேதய முண்டாகும்பொருட்டு அவனது சரீரமுற்றும் நனையும்படிச் சிர சிற்பொழிய அவன் ஆனந்தபரவசமாய் அந்த ஞானப்பாலையுண்டு உள்ளும் புறம்பும் நிறைபப் பெற்றுத் திருப்தியடைந்தனன். பின்னர் அவன் உண்டு மிகுந்த அப்பால் வெள்ளமானது அவனது முகமாகிய தாமரையினின்றும் வழிந்து நந்திமலையில் விழுந்து அம்மலையினின்றும் நதிரூபமாய் பூமியிற் பிரவேசித்துப் பெருக் கெடுத்து வந்து தக்ஷிணத்திலிருக்கின்ற பாகுநதியையும், உத்த ரத்திலிருக்கின்ற குண்டலி நதியையும், இவைகளோடு சமாகம னம் விருத்தம் என்கிற நதிகளையும் தனக்கு இருபக்கத்திலும் அங்கமாகக்கொண்டு அவைகளோடு சமமாகக் கலந்து காஞ்சிநக ரத்திற் பிரவேசித்து ஒன்ருய் அவ்வழியே சென்று சமுத்திர சங் கமாயிற்று. அந்த க்ஷீரபானத்தால் சகல கலாவல்லபமடைந்த பிரமன் அந்நதியை நோக்கி "இதில் எவர்கள் ஸ்நானஞ் செய் கின்றுர்களோ அவர்கள் பூர்வக்ஞான முடையவர்களாயும் ஸர்வ வித்யாபாரங்கதர்களாயும் மோக்ஷமடையக் கடவர்" என்றுவர மளித்தனன்.

மஹிமை

முன்னொருகாலத்தில் அந்தணனொருவன் தன்னுடைய குல தர்மங்களைக் கைவிட்டுப் பாவங்களையே செய்து மரணமடைந்து